சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.16.03.2026.
OS.No. 161/2018
PW 2 : தங்கபாண்டியன் (வயது 39 ) த/பெ.ராஜேந்திரன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>1 முதல் 4, 6,7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கானது யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1 ஆம் வாதியான P.ராஜேந்திரன் என்பவர் எனது அப்பா, 2 ஆம் வாதி குகேஸ்வரன் எனது அண்ணன். 3 ஆம் வாதி நான். எனது அப்பாவிற்கு 2 மகன்கள் ஒரு மகள். அந்த மகள் பெயர் அகிலா அவர் 7 ஆம் பிரதிவாதி ஆவார்.

இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது தாயாரின் சொத்தில் பாகம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னென்ன சொத்து எங்கெங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆதியில் தாவா சொத்து யாருடையதாக இருந்தது என்றால் எனது தாத்தா தங்கராசு பெயரில் இருந்தது. எனது பாட்டி பெயர் மருதாம்பாள் அவரை தனம் என்றும் அழைப்பார்கள்.

தங்கராசு- மருதாம்பாளுக்கு மொத்தம் 8 வாரிசுகள் அவர்கள் முறையே ராமு, ராஜேந்திரன், கண்ணன், ரவி, பத்மா, மதியழகன், கமலா, லட்சுமி ஆகியோர் ஆவர். இதில் எனது தந்தை ராஜேந்திரனுக்கு இரண்டு தாரமா என்றால் ஆமாம். லட்சுமியை திருமணம் செய்து அவர் இறந்த பிறகு கமலா என்வரை திருமணம் செய்து கொண்டார்.

எனது அம்மா பெயர் கமலா. லட்சுமியின் வாரிசுதாரர்கள் 2 ஆம் வாதி குகேஸ்வரன், அகிலா. எனது அம்மா கமலாவிற்கு நான் ஒரு வாரிசு தான். பெண் வாரிசுகள் இல்லை. சுமதி என்ற பெண் வாரிசு இருந்தாரா என்றால் இருந்தார், சிறுவயதிலேயே இறந்துவிட்டார்.

இந்த வழக்கில் எனது அப்பா, நான், 2 ஆம் வாதி ஆகியோர் என்ன கட்சி செய்கிறோம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது தாத்தா ராஜேந்திரன் மற்றும் எனது பாட்டி எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது அம்மா 1999 ல் இறந்துவிட்டார். எனது தாயார் இறக்கும் முன்பிருந்தே அவரது வாரிசுகள் அனைவரும் ஒரே வீட்டில் கூட்டாக இருந்தோமா அல்லது தனி தனி வீட்டில் இருந்தோமா என்றால் ஒரே வீட்டில் கூட்டாக இருந்தோம்.

எப்போது அனைவரும் தனி தனி வீட்டிற்கு சென்றோம் என்றால் 2000 ஆம் வருடம் அனைவரும் தனி தனி வீட்டிற்கு சென்று விட்டோம். 2000 ஆம் வருடத்திலிருந்தே இந்த சொத்தின் பாக பிரிவினை பற்றி பேச்சு வார்த்தை நடந்ததா என்றால் நானும் பேசவில்லை, அவர்களும் பேசவில்லை. பின்னிட்டு எப்போது இது குறித்து பேச்சு வார்த்தை நடந்தது என்றால் 2005, 2006 ல் எனது அப்பா பாக பிரிவினை குறித்து பேச்சு வார்த்தை பேசினார், அதற்கு அவர்கள் கட்டுப்படவில்லை. அதன் பிறகு இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம்.

2014 ல் வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்தே இந்த வழக்கு பற்றிய விவரம் அனைத்தும் எனக்கு தெரியும். இந்த வழக்கை பொறுத்தவரை முதலில் ஒரு தீர்ப்பு வந்ததா என்றால் வந்தது. என்ன தீர்ப்பு என்றால் எங்களுக்கு சொத்து தரவேண்டும் என்று தீர்ப்பானது. அந்த தீர்ப்பின்போது நான் இந்த வழக்கில் சாட்சி சொன்னேனா என்றால் இல்லை.

மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்தார்கள், அந்த மேல்முறையீட்டில் என்ன தீர்ப்பானது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விசாரணை நீதிமன்றத்தில் எனது தகப்பனார் என்ன சாட்சியம் அளித்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போதும் அதற்கு முன்பும் எனக்கும் எனது அப்பாவிற்கும் விரோதம் உள்ளதா என்றால் இல்லை.

வழக்கை எந்த வருடம் நாங்கள் தாக்கல் செய்தோம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் 2006,2007 லேயே தாக்கல் செய்துவிட்டோம். வழக்கறிஞர்

அறிவிப்பு எப்போது அனுப்பினோம் என்றால் அந்த காலகட்டத்தில் தான் அனுப்பினோம். எனது நெருங்கிய உறவினராகவோ அல்லது நண்பராகவோ T.R.பழனிசாமி என்ற நபர் எனக்கு தெரிந்த நபராக இருக்கிறாரா என்றால் இல்லை.

இந்த வழக்கு சொத்து விவரத்தை எத்தனை சர்வே எண்களாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் அனைத்து சர்வே எண்களும் தெரியாது. அனைத்து வழக்கு சொத்துக்களும் திருமணமேடு , வளவனூர் வழியாக உள்ள ரோட்டில் உள்ளது. இந்த வழக்கு சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்களை நாங்கள் சாகுபடி செய்கிறோம் என்றால் எந்த சொத்திலும் சாகுபடி செய்யவில்லை. அவர்கள் சொத்தினை தரவில்லை.

நான் இலால்குடியில், டாக்சி டிரைவராக வேலை செய்கிறேன். எனது அப்பா அவரது சாட்சியத்தில் அகிலா என்பவர் ஒரு குறிப்பிட்ட சர்வே எண் கொண்ட சொத்தை சாகுபடி செய்ததாக கூறியுள்ளார் என்றால் அது பொய்யானது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொத்தில் பாகம் வேண்டும் என்று குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து மத்தியஸ்தம் செய்துள்ளோமா என்றால் இல்லை. என் அம்மாவுடன் உடன் பிறந்தவர்களிடம் வாதிகளாகிய நாங்கள் பேச்சுவார்த்தையில் உள்ளோமா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
தங்க பாண்டியன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.03.16 17:55:46 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி